மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பறக்கும் படையை அமைப்பதை விட, ஆங்காங்கே அமைப்பு ரீதியாக தொழிலாளர்கள் ஒற்றுமையோடு இருந்தால் அத்தகைய சலுகைகளைப் பெற முடியும். எங்காவது அப்படிக் குறை பாடுகள் நடக்கின்றது என்று சொன்னால் அங்கே அரசு நிச்சய மாகத் தொழிலாளர்கள் பக்கம் இருக்கும்.

இலங்கை அகதிகளுக்கு முகாம்கள் அமைத்தல்.

181—(*வினா எண் 12457) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்காகத் தமிழகத் தில் எத்தனை இடங்களில் நிரந்தர, தற்காலிக முகாம்கள் அமைக் கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த அகதிகளுக்காக தமிழக அரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

(இ) மத்திய அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்கி யுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) இலங்கை அகதிகள் 1983 ஜூலை முதல் வந்து கொண்டிருக் கிறார்கள். 1983-ல் அவர்களது வருகை அதிகரித்தபோது இரு நிரந்தர முகாம்களைத் தவிர 172 தற்காலிக முகாம்கள் ஏற்படுத் தப்பட்டன; மண்டபத்தில் 1,200 புதிய வீடுகள் கட்டப்பட்ட தன் விளைவாகவும், விளாங்குடியில் 792 புது வீடுகள் அகதிகளுக் காக வழங்கப்பட்டதன் விளைவாகவும் இவை தற்போது 4 நிரந் தர முகாம்களும் 65 தற்காலித முகாம்களுமாக இயங்குகின்றன.

(ஆ) மற்றும் (இ): அகதிகளுக்காகச் செலவழிக்கப்பெறும் அனைத்துச் செலவுகளும் மைய அரசினால் ஏற்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டு முதல் 1986-87 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய இலங்கை அகதிகளின் நிவாரண உதவிகளாக ரூ. 631.91

1987 மார்ச் 26]

இலட்சமும், கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 362 லட்சமுமாகக் கூடுதல் ரூ. 993.17 லட்சம் வரையில் செலவினம் செய்யப்பட்டு, 1985-86 ஆம் ஆண்டு முடிய மத்திய அரசினர் முழு மானியத் தொகை ரூ. 835.06 லட்சம் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு விட்டது. மீதமுள்ள தொகையைப் பெற நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, கலவரத்தின் காரணமாக இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கிற அகதிகள் என்றாவது ஒரு நாள் இலங்கைக்குச் செல்ல வேண்டிய வர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்வை அளிப்பதற் கும், அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதற்கும் இலங்கை அரசு இதுவரையில் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா? அப்படி முயற்சி எடுத்திருந்தால் இது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் ஏதாவது நடந்திருக்கிறதா? அண்மையில் நமது பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தபோது இலங்கை அகதிகள் சம்பந்தமாக பேசப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அப்படியானால் அதன் விவரம் என்ன வென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற விவரங்களைத் தனியாகக் கேட்டால் அதுபற்றி முழு விவரத்தையும் அளிக்க முடியும். ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்ல முடியும். இருக்கிற அகதி களைத் திரும்ப அழைப்பதற்கு ஏற்ற முறையில் இலங்கை அர சாங்கம் செயல்படவில்லை. தாங்களே அடித்துக் கொன்றது போதாது என்று இப்போது வெளிநாட்டுக் கூலிப் படைகளையும் வைத்துக்கொண்டு, சொந்த நாட்டிலே வாழ்கின்ற தமிழர்களைத் தாக்குவதுதான் இலங்கை அரசின் போக்கே தவிர அவர்களிட மிருந்து இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்திருக்கிற அகதிகள் தங்களுடைய சொத்துக்களையும், உடைமைகளையும் அங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இலங்கை அரசின் போக்கைக் கண்டிக்கிற வகையில் அங்கே அவர்கள் விட்டுவிட்டு வந்திருக்கிற சொத்துக்களையும், உடைமை

களையும் பெற்றுத் தருகிற ஒரு நிலையை நமது அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது குறைந்தபட்சம் அதற்கான நஷ்டஈட்டை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சொத்துக்களையும், உடைமைகளையும் மட்டுமல்ல நிலத்தையும் மீட்கத்தான் போராடுகிறார்கள்.

துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கல்.

182—(*வினா எண் 7312) **திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திருமதி இரா. சரோஜா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது நிலவி வரும் வறட்சியினை கணக்கில்கொண்டு குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் இந்த ஆண்டிலாவது துறையூர் ஒன்றியத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, துறையூர் பேரூராட்சியின் மக்கள் தொகையை மனதிலே கொண்டு ரூ. 48.7 லட்சம் மதிப்பீட்டில் ஐயாறு நதியினை நீர் ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.